**செய்தி வெளியீடு எண்: 540** **நாள்: 21.11.2016**

## <u>செய்தி வெளியீடு</u>

134அரவக்குறிச்சி, 174.தஞ்சாவூர் மற்றும் 195.திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை 22.11.2016 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 8.00 மணி முதல் கீழ்க்கண்ட வாக்கு எண்ணும் மையங்களில் நடைபெறுகின்றன :-

| சட்டமன்றத் தொகுதியின் எண் மற்றும் பெயர் | வாக்கு எண்ணும் மையம் | வாக்கு எண்ணும் அறைகள் | வாக்கு எண்ணும் மேசைகள் | சுற்றுகள் |
|---|---|---|---|---|
| 134.அரவக்குறிச்சி | எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரி, கரூர். | 1 | 14 | 18 |
| 174.தஞ்சாவூர் | குந்தவை நாச்சியார் அரசு பெண்கள் கலைக் கல்லூரி, தஞ்சாவூர். | 1 | 14 | 20 |
| 195.திருப்பரங்குன்றம் | மதுரை மருத்துவ கல்லூரி, மதுரை. | 1 | 14 | 21 |

2. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, கீழ்க்காணும் ஏற்பாடுகள் வாக்கு எண்ணும் மையங்களில் செய்யப்படுகின்றன:-

- அஞ்சல் வாக்கு ஏதேனும் இருப்பின், அதன் எண்ணிக்கை முதலில் எடுத்துக்கொள்ளப்படும், இல்லையெனில் மின்னணு இயந்திரத்தில் பதிவான வாக்கு எண்ணிக்கை உடனடியாக தொடங்கும்.
- மொத்தம் 225 வாக்கு எண்ணுகை பணியாளர்கள் பயன்படுத்தப்படவுள்ளனர். ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை மேசையிலும் ஒரு வாக்கு எண்ணுகை பணியாளர் தவிர ஒரு நுண் பார்வையாளர் இருப்பார். நுண் பார்வையாளர் நடுவண் அரசு / பொதுத்துறை சார்ந்தவராக இருப்பார்.
- வாக்கு எண்ணிக்கை செயல்பாட்டில் உறுதி தன்மையினை வெளிபடுத்துவதற்காக, வாக்கு எண்ணுகை மேற்பார்வையாளரால் ஒவ்வொரு மேசையிலும் வெளியிடும் முடிவு அறிவிப்பின் நகல், ஒவ்வொரு வாக்கு எண்ணுகை முகவருக்கு கொடுக்கப்படும்.
- ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை சுற்று முடிந்த பிறகு, வேட்பாளர் பெற்ற வாக்குகள் சரிபார்க்கப்பட்டு அடுத்த சுற்று தொடங்குவதற்கு முன்பாக வெளியிடப்படும். ஒலிபெருக்கியின் மூலம் அறிவிப்பது தவிர அதன் ஒரு பிரதி வேட்பாளர் அல்லது அவருடைய முகவருக்கு வழங்கப்படும்.

**3.** பின்வரும் நபர்கள் மட்டுமே வாக்கு எண்ணிக்கை மையத்தில் அனுமதிக்கப்டுவர்:

(i) வாக்கு எண்ணுகை மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள், நுண் பார்வையாளர் மற்றும் பிற வாக்கு எண்ணும் பணியாளர்கள்.

(ii) இந்திய தேர்தல் ஆணையத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள்.

(iii) தேர்தலை நடத்தும் அதிகாரிகள்.

(iv) வேட்பாளர்கள், தேர்தல் முகவர்கள் மற்றும் அவர்களுடைய வாக்கு எண்ணும் முகவர்கள்.

**4.** வாக்கு எண்ணும் செயல்முறை அனைத்தும் வீடியோ செய்யப்படும். குறுந்தகடு (CD recording) பதிவு சம்பந்தப்பட்ட மாவட்டத் தேர்தல் அதிகாரியின் பொறுப்பில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

**5.** பின்வரும் வசதிகள் ஊடகங்களுக்கு வழங்கப்படுகின்றன:-

(i) ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்திலும் ஒரு ஊடக அறை உருவாக்கப்படும்.

(ii) தேர்தல் ஆணையத்தின் உரிய அனுமதி கடிதம் பெற்றவர்கள் மட்டுமே நுழைய முடியும்.

(iii) வாக்கு எண்ணும் இடத்தில் கைப்பேசிக்கு அனுமதி இல்லாததால், அவர்களுடைய கைப்பேசி மற்றும் பிற மின்னணு சாதனங்கள் ஊடக அறையில் வைக்கப்படும்.

(iv) ஒவ்வொரு சுற்றின் முடிவு ஊடக அறைக்கு அனுப்பப்படும்.

❖ தேர்தல் நடத்தும் அதிகாரி முடிவு அறிவிப்பதற்கு முன், சம்பந்தப்பட்ட தொகுதியின் பார்வையாளரிடமிருந்து முடிவு அறிவிப்பதற்கான ஒப்புதல் பெற வேண்டும்.

**6.** தேர்தல் நடத்தும் அதிகாரியிடம், வேட்பாளர் தேர்தல் சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சம் நான்கு நபர்கள் மட்டுமே உடன் வரலாம் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**